சபரகமுவ மாகாண சபை - 2019

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சபரகமுவ மாகாண சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று,அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று,காசுப்பாய்ச்சல்கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின்பொழிப்புடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானநிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைச் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும்2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும்இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ளஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைச்சட்டத்தின் 23(2)ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் பிரகாரம் பொழிப்பறிக்கை 2020நவம்பர்30 ஆம் திகதிவிநியோகிக்கப்பட்டதுடன், தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவானமுகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 நவம்பர்30ஆம் திகதி விநியோகிக்கப்பட்டது.இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும்தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கைபாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின்முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து,நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் சபரகமுவ மாகாண சபையின் நிதி நிலைமையினையும் மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண சபையினால் 2015 ஆண்டில் நிதி குத்தகையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட 49 வாகனங்களின் பெறுமதியான ரூபா 150,990,000 தொகை நிதி நிலைமை கூற்றில் நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | சகல நிலையான சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர் வரும் ஆண்டில் நீண்ட கால குத்தகை வாகனங்களை கணக்கீடு செய்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதி நிலைமை கூற்றில் நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் நிலையான சொத்துக்கள் மற்றும் நடைமுறை வேலைகளாக ரூபா 4,376,709,786 காட்டப்பட்ட போதும் மாகாண திறைசேரி வெளியீட்டு குறிப்பின் பிரகாரம் அது ரூபா 4,571,189,384 ஆனதில் ரூபா 194,479,598 ஆன தேறிய வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. மேலும், மாகாண சபையின் 15 அமைச்சுக்கள்/ திணைக்களங்களினால் 2018 ஜனவரி 01 திகதியில் காணப்பட்ட நிலையான சொத்துக்கள் கணக்கீட்டை முடிவுறுத்தியிருக்காததுடன், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்கள் மற்றும் திறைசேரி வெளியீட்டிற்கு இடையிலான வித்தியாசத்தை இணக்கஞ் செய்ய வேண்டியதுடன், அனைத்து நிலையான சொத்துக்களையும் கணக்கீடு செய்தலை முடிவுறுத்த வேண்டும். | எதிர் வரும் ஆண்டினுள் இணங்காமையை தீர்க்க நடவடிக்கை எடுக்கிறேன். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மற்றும்நியாயமாக சமர்ப்பித்தல்மற்றும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடியபொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில்உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாகாண சபையின் நிதி அறிக்கையீட்டு செயற்பாடு தொடர்பான பொறுப்பு, மாகாண திறைசேரி உள்ளிட்ட அவ் அவ் நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம்சபரகமுவ மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத்தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச்செல்லப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடியபொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமானஉறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்டகணக்காய்வாளரின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும்.

நியாயமான உறுதிப்படுத்தல்உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வுநியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும்பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல.மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையானதவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக்கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாககருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வின்பிரகாரம் கணக்காய்வு என்னால் செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதுசந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம்மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக்கொள்வதற்கும்,போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப்பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ்கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாகஇருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல்,வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல்மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டுமாகாண சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாகஅபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளில் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகள்நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட் தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றுமஉள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில்உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதானஉள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் கீழ் குறிப்பிடும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது.

(அ) 6(i)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் படி மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன்இணக்குகின்றது.

(ஆ) 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் படி முன்னைய ஆண்டு நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 இணங்காமை**

**சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்தவ தீர்மானங்களுடனான தொடர்பு | | இணங்காமை | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(8) மற்றும் (9) பிரிவுகள் | என்னால் 2006 ஆகஸ்ட் 11 ஆம் திகதி மற்றும் 2019 ஏப்ரில் 12 ஆம் திகதிகளில் விநியோகிக்கப்பட்ட 02 மிகை அறவீட்டு பத்திரங்களிற்குரிய ரூபா 733,830 இனை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிரதேச சபை சட்ட ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | தவனைகளாக அறவிட மற்றும் வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 1993 இன் 05 ஆம் இலக்க சபரகமுக மாகாண வீடு அபிவிருத்தி நிதிய உருவாக்கம் தொடர்பான நியதிச் சட்டத்தின் 07 பிரிவு | நிதிய நோக்கை அடைந்து கொள்ளும் வகையில் நிதியத்தைஈடுபடுத்தும் முறை தொடர்பான பிரமாணங்களை தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | நியதிச் சட்டம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் பிரமாணங்களை தயாரித்து சபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதாக. |
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை பகுதி 1 இன் xv அத்தியாயத்தின் 4.2, 4.4 மற்றும் 5.2 பிரிவு. | உதவி விவசாய பணிப்பாளர் பதவியொன்றில் சேவை புரிந்த பெண் அலுவலளரின் முழு சமபளத்துடன் கூடிய வெளி நாட்டு கற்கை விடுமுறை அங்கீகரிக்கையில் பிணை முறி ஒன்று கைச்சாத்திடப்பட்டிருக்காததுடன், சம்பளத்துடன் கூடிய கற்கை விடுமுறை காலத்தை கணக்கிடுகையில் கட்டாய சேவை காலம் 04 வருடங்கள் 05 மாதங்களை குறைத்து இனங்கண்டு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அவ் அலுவலர் கட்டாய சேவை காலத்தை பூர்த்தி செய்யாது சம்பளமற்ற | பிணை முறி கைச்சாத்திடப்படாத போதும் வெளிநாடு சென்றிருந்த காலத்திற்காக சம்பளம் வழங்கியிருந்தமையால் சம்பளத்துடன் கூடிய விடுமுறை பெற்றுக் கொண்டதாக கணித்து தாபன விதிக்கோவை | இவ் அலுவலளர் பிணை முறி கைச்சாத்திடாததால் உறுதியாவது அவர் பெற்றுக் கொண்டது சம்பளமற்ற விடுமுறை என்பதாகும். சம்பளமற்ற வெளிநாட்டு விடுமுறை பெற்றுக் கொள்கையில் தாபன விதிக்கோவை 10 ஆவது பின்னிணைப்பு பிரகாரம் உடன்படிக்கை கைச்சாத்திட்டிருப்பது அமைச்சின் செயலாளருடன் என்பதுடன், மாகாண சபை சட்டப் பிரிவினால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | விடுமுறை மீது மீண்டும் வெளிநாடு சென்றிருந்ததுடன் மீண்டும் சேவைக்கு அறிக்கை செய்திருக்கவில்லை. அதன் பிரகாரம், உடன்படிக்கையின் (13) அத்தியாயத்தின் (ஆ) பிரிவு பிரகாரம் அறவிட முடியுமாக இருந்த ரூபா 14,407,844 மற்றும் ரூபா 117,133 தண்டப்பணத்தையும் அறவிட முடியாதிருந்தது. அதே போன்று சம்பளமற்ற வெறிநாட்டு விடுமுறை அங்கீகரிக்கையில் கைச்சாத்திட்டிருந்த உடன்படிக்கையின் 02(iv) பிரிவு பிரகாரம் சம்பளமற்ற விடுமுறை முடிவடைந்து மீண்டும் வருகை தராததன் மீது அறவிட வேண்டிய ரூபா 1,238,600 இனையும் அறவிட்டிருக்கவில்லை. | வ பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | |
| (ஈ) | சபரகமுவ மாகாண சபை நிதி ஒழுங்கு விதி கோவை | | | |
| (i) | நிதி ஒழுங்கு விதி 54.1.6 | மாகாண சபையின் 02 அமைச்சுக்கள் மற்றும் 04 நிறுவனங்களில் 2000 முதல் 2018 ஆண்டு வரையான காலப் பகுதியில் ஏற்பட்டிருந்த 43 வாகன விபத்துக்களிற்குரிய ரூபா 34,323,927 ஆன கூட்டு நட்டம் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதி ஒழுங்கு விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | விசாரணை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் அறவிட நடவடிக்கைக எடுத்தல் மற்றும் குறித்த பிரகாரம் பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதி ஒழுங்கு விதி 259.2 | 03மாகாண அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் தொடர்பாக 2020 ஜுலை 31 திகதி வரையும் தீர்க்கப்படாத கட்டுநிதி மீதி ரூபா 120,782,887 ஆனது. | நிதி ஒழுங்கு விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரதான அமைச்சின் தீர்க்கப்படாத முற்பணம் காரணமாக கட்டுநிதியை தீர்க்க முடியதுள்ளதுடன், நெடுஞ்சாலை அமைச்சினால் நீதிபதி திணைக்களத்தின் ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், சுகாதார திணைக்களத்தினால் பிரதான அமைச்சு மற்றும் மாகாண சபை வரிசை அமைச்சிற்கு மீள்நிரப்புவதற்காக பட்டியல்கள் அனுப்பப்பட்டுள்ளன. |
| (உ) | 2018 ஜுன் 22 ஆம் திகதிய 26/2018 ஆம் இலக்க கல்வி அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கை 14.1.8 மற்றும் 14.1.11 பந்தி | இர/எம்பிலிபிடிய மகா வித்தியாலயத்தினால் பரிந்துரைத்தல், அங்கீகரித்தல் மற்றும் உறுதி செய்தலின்றி 2018 ஆண்டில் 105 கொடுப்பனவு வவுசர்களின் கூட்டுத் தொகை ரூபா 1,752,019 மற்றும் 2019 ஜனவரி முதல் ஜுன்26 வரையும் 25 கொடுப்பனவு வவுசர்களின் கூட்டுத் தொகை ரூபா 467,994 இனை பாடசாலை அபிவிருத்தி சங்க கணக்கிலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வவுசர்களின் குறைபாடுகளை சரி செய்து கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளேன். எதிர் காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு பவனித்துக் கொள்ளுமாறு அதிபரை அறிவூட்டியுள்ளேன். |

**2. வருமான முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண வருமான திணைக்களம் மற்றும் மாகாண காணி திணைக்களத்திற்குரிய 2018 திசெம்பர் 31 திகதியன்று நிலுவை வருமானம் | நிலுவை வருமான அறவிடலை ஓழுங்கான முறையின் | நிலுவை வருமானத்தை அறவிடதொடர்ந்துநடவடிக்கை எடுக்கப்படுவதுடன், வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 61,478,981 ஆன போதும், மீளாய்வாண்டில் அவற்றில் ரூபா 4,034,560 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | பிரகாரம் மேற்கொள்ள வேண்டும். | |
| (ஆ) | எலபாத்த பிரதேச செயலகப் பிரிவின் திகான கிராம அலுவலர் பிரிவில் வடவல முகலான எனும் காணியின் சிறிய நீர்மின்சார உற்பத்தி நிலையமொன்றை நிர்மாணிக்க தனியார் நிறுவனம் ஒன்றிற்கு 1999 ஆண்டில் 21 ஆண்டுகளிற்காக நீண்ட கால குத்தகை வழங்கப்பட்டிருந்த ஹெக்டயார் 2.350 ஆனகாணித் துண்டிற்காக 2020 ஆண்டு வரை அறவிட வேண்டிய நீர் வரி ரூபா 2,336,675 அறவிட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவையை செலுத்துமாறு குறித்த நிறுவனத்திற்கு அறிவித்துள்ளதுடன், 2020 நவம்பர் மாதத்திற்கு முன்னர் செலுத்தி முடிப்பதாக பிரதேச செயலாளரிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

**3. நிதி மீளாய்வு**

**நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்தஆண்டின் போது மாகாண சபை நிதியத்தில் ரூபா 550,406,792இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,575,207,635தொகையாக இருந்தது.

**4. நியதிச் சட்டக் கணக்குகள், நிதியங்கள் மற்றும் வாணிப முற்பணக் கணக்குகள்**

**4.1 நியதிச் சட்டக் கணக்குகள்/ நிதியக் கணக்குகள்**

**(அ) வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபை பயன்படுத்திக்கொண்டிருக்கும் கேகாலை மாவட்டத்தில் 07 செயலகப் பரிவுகளில் காணப்படும் ஏக்கர் 4.094 காணி மற்றும் அவற்றில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்களை தொடர்புடைய தரப்பினர்களிடமிருந்து சுவீகரித்துக் கொண்டு மதிப்பிட்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | காணி மற்றும்கட்டிடங்களைசு வீகரித்துக் கொண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | உரிமையை சுவீகரித்துக் கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ள போதும் சுவீகரிக்கும் நடவடிக்கை தாமதமாகியுள்ளது. |
| (ii) | கேகாலை பேரூந்துத் தரிப்பிடத்தில் காணப்பட்ட சபைக்கு சொந்தமான 05 கடையறைகள் 2017 நவம்பர் 01 திகதி முதல் குத்தகை வழங்கியிருந்த போதும், 2020 பெப்ரவரி 28 திகதி வரையும் ரூபா 650,000 குத்தகை பணத்தை | வருமானத்தை தாமதமின்றி அறவிட வேண்டியதுடன் அவ்வாறில்லாத சந்தர்ப்பங்களில் உடன்படிக்கை | அவதானத்துடன் இணங்குகிறேன். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், குத்தகை உடன்படிக்கையின் 29 பிரிவின் பிரகாரம் குத்தகை உடன்படிக்கையை இரத்துச் செய்திருக்கவில்லை. | பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | |
| (iii) | சபையினால் 2015 திசெம்பர் மாதத்தில் ரூபா 3,441,110 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த பாதுகாப்பு கெமரா தொகுதி 2017 ஆண்டு செயலிழந்திருந்ததுடன், 2020 பெப்ரவரி வரையும் குறித்த திருத்த வேலைகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | குறித்த திருத்த வேலைகளை மேற்கொண்டு பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | அதிகார சபைக்கு சொந்தமான தொழிநுட்ப அறிவுடன் கூடிய அலுவலர் ஒருவர் இல்லாததன் காரணமாக செயலற்ற நிலைக்கு ஆகியுள்ளதுடன், பழுதுபார்க்க ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

**(ஆ) அபிவிருத்தி ஆக்கம் மற்றும் இயந்திர உபகரண அதிகார சபை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அதிகார சபையினால் குறித்த சேவைகளை நிறைவேற்றிக் கொள்ள விடுக்கப்பட்ட கோரிக்கை கடிதம் இல்லாததன் மீது கடன்படுனர்கள் கொடுப்பனவை புறக்கணித்தன் காரணமாக மீளாய்வாண்டினுள் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பிரகாரம் ரூபா 911,842 ஆன கடன்படுனர் மீதியொன்றை ஐயக்கடனாக பதிவழித்திருந்தது. | குறித்த சேவைகளை நிறைவேற்றிக் கொண்டதாக அதிகார சபைக்கு சொந்தமாக பேணப்படும் பதிவேடுகளை பரீட்சித்து கடன்படுனர் மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. |

**(இ) சிறுவர் முன்பராய கல்வி அபிவிருத்தி அதிகார சபை.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபரகமுவ மாகாணத்தினுள் அமைத்துள்ள மற்றும் அமைக்கப்படுகின்ற அனைத்து சிறுவர் முன்பராய கல்வி அபிவிருத்தி மத்திய நிலையங்களும் பதிவு செய்வது அதிகார சபையின் முக்கிய பொருப்பான போதும் 2019 ஆண்டு வரையும் பதிவு செய்யப்படாத 275 முன்பள்ளிகள் காணப்பட்டன. 2019 ஆண்டிற்காக வருடாந்த பதிவுகளை நாளாதுவரையாக்கப்படாத முன்பள்ளிகளின் எண்ணிக்கை 824 ஆனதுடன் அது ஆரம்ப பதிவு எண்ணிக்கையான 1,238 இன் 67 சதவீதமாகும். | அனைத்து முன்பள்ளிகளையும் பதிவு செய்ய வேண்டும். | அதிகார சபையின் கீழ் முன்பள்ளிகள் மேற்பார்வை மற்றும் ஒழுங்கமைத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது தற்போது பிரதேச செயலகங்கள் மற்றும் பிரிவு அலுவலகத்தை பிரதி நிதிப்படுத்தி சிறுவர் முன்பராய அலுவலர்கள் மற்றும் கருத்திட்ட அலுவலர்களினூடாக, அவர்களின் மேலதிக கடமையாகவே. எதிர்காலத்தில் பட்டதாரி பயிலுனர்கள் சிறுவர் முன்பராய விடயம் தொடர்பாக உரிய பயிற்சியை வழங்கி பிரிவு |

| | | |
|---|---|---|
| | | அலுவலக மட்டத்தில் இணைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது சபரகமுவ மாகாணத்தில் பதிவு செய்துள்ள மொத்த முன்பள்ளிகள் 1269 இல் 10முன்பள்ளிகள் தற்போது மூடப்பட்டுள்ளதுடன் வருடாந்த பதிவை நாளாதுவரையாக்காத 824 முன்பள்ளிகளில் 571 இன் பதிவுகள் நாளாதுவரை ஆக்கப்பட்டுள்ளது. பதிற்காக விண்ணப்பங்கள் சமர்பித்துள்ள 100 முன்பள்ளிகள் உள்ளதாக இனங்காணப்பட்டுள்ளன. |

**(ஈ) பின்னவலஇபரெனிகம தேமா பூங்கா**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 திசெம்பர் 30 திகதிய 03/2014 இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 03(vii) பந்தி பிரகாரம் அலுவலர் ஒருவரின் நிரந்தர பதவிக்கு மேலதிகமாக வேறொறு பதவியில் பதில் கடமைக்கு அல்லது கடமை காப்பிற்கு நியமிக்கப்பட்டுள்ள போது சுற்றறிக்கையின் 02(iii)(ஆ) இன் கீழ் உரித்தாகும் தொலைபேசி படியாககொடுப்பனவு செய்ய முடியுமாவது ஒரு பதவியிற்கு உரித்தாகும் மாதாந்த உச்ச இணைந்த செலவு எல்லையின் கீழான போதும், அதற்கு முரணாக 2017 முதல் 2019 ஜுன் வரை தவிசாளர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரிக்கு தொலை பேசி படிகள் முறையே ரூபா 87,500 மற்றும் ரூபா 100,000 மிகையாக செலுத்தப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை பிரகாரம் கொடுப்பனவு செய்ய வேண்டிய போதும், மிகை கொடுப்பனவை அறவிட வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. |

**(உ) வீடமைப்பு அபிவிருத்தி நிதியம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1993 இன் 05 ஆம் இலக்க சபுரகமுவ மாகாண வீடமைப்பு அபிவிருத்தி நிதியத்தை உருவாக்கல் தொடர்பான நியதிச்சட்டத்தின்03 பிரிவு பிரகாரம் 2017 ஆண்டு முதல் நிதியத்திற்கு பணம் செலவு வைக்கப்படாததால் நிதியத்தின் நோக்கங்களை மேற்கொள்ள முடியாதிருந்தன. | பிரகடனம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2017 ஆண்டு முதல் மாகாண மானியம் கிடைத்திருக்காததுடன், எதிர்காலத்தில் நிதியத்திற்கு நிதியை பெற்றுக் கொள்ள முறைமையொன்றை தயாரிக்கிறேன். |

**(ஊ) சமூகசேவை நிதியம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 1994 இன் 04 இலக்க சமூகசேவை நிதியத்தை உருவாக்குவது தொடர்பானபிரகடனத்தில் நிதியத்திற்கு பணம் சேர்த்தல், நிதியை பயன்படுத்துதல் மற்றும் நிர்வகிக்கும் 24 ஏற்பாடுகள் பிரகாரம் வேறு எவ்வித அன்பளிப்பு உத்தேச திட்டத்தினால் அன்பளிப்பு அல்லது உதவி கிடைக்காத வறுமையிலுள்ள குடும்ப அங்கத்தவர்களுக்கு உதவ முடியுமென குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் அவ்வாறான குடும்பங்கள் தொடர்பாக போதிய ஆய்வொன்றை மேற்கொண்டு அவர்களை இனங்கண்டு அன்பளிப்பு வழங்க போதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாததால் பண்ட மற்றும் நிதி உதவியாக 2018 ஆண்டில் செவிடப்பட்ட ரூபா 18,669,207 ஆன செலவு 2019 ஆண்டில் ரூபா 9,801,742 வரை குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டு இறுதியில் நிதியத்தில் ரூபா 79,133,415 மீதியொன்று காணப்பட்டது. | நிதியத்தை மேலான நிலையில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரதேச செயலகங்களிற்கு இணைக்கப்பட்டுள்ள சமூக சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் இனங்காணப்பட்ட குடும்பங்களிற்கு உதவி வழங்கப்பட்டுள்ளது. |

**4.2 வாணிப முற்பணக் கணக்கு**

**(அ) உந்துகொட - கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கேகாலை மாவட்டத்தினுள் வருடமுழுவதும் பயிர்செய்கை மட்டும் கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட முடியுமான கால் நிலை காண்பபடுகின்ற போதும், பண்ணைக்கு சொந்தமாகவுள்ள 100 ஏக்கர் அளவான காணியில் 50 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பண்ணையிலுள்ள இயந்திரம் மற்றும் உபகரணங்கள் உச்ச கொள்ளளவுடன் உற்பத்தி நடவடிக்கைகளிற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பண்ணைக்கு சொந்தமாகன காணி மற்றும் பௌதீக வளங்களை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும். | பண்ணை உற்பத்திகளுக்காக காணப்படும் சந்தையை விருவுபடுத்திக் கொண்டு தேவையான ஒதுக்கீட்டை பெற்று பண்ணையை விரிவாக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

(ஆ) **மெனேரிபிடிய– அடலுகம கல்வி அபிவிருத்தி மத்திய நிலைய முற்பணக் கணக்கு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மெனேரிபிடிய கல்வி அபிவிருத்தி மத்திய நிலையத்தில் 2019 மே முதல் ஒக்டோபர் வரையான கால எல்லையினுள் 31 பற்றுச்சீட்டுக்களின் மூலம் ரூபா 3,266,764 ஆன பணம் பெற்றுக் கொள்கையில் சபரகமுவ மாகாணத்தில் மாகாண நிதி விதி 113.3.1 அற்கு முரணாகபற்றுச்சீட்டுக்களின் மூலப் பிரதி பணம் செலுத்துபவருக்கு விநியோகிக்காமல் நிறுவனத்தினுள் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | வருமானம் கிடைக்கும் சந்தர்ப்பத்திலேயே பற்றுச் சீட்டு விநியோகிக்கப்பட வேண்டும். | கிடைக்கும் வருமானத்திற்கு பற்றுச் சீட்டை உரிய சந்தர்ப்பத்தில் விநியோகித்து உரிய நிறுவனங்களிற்கு அனுப்புவது தாமதமாகியுள்ளது. எதிர் காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு குறித்த மத்திய நிலைய பொறுப்பு உத்தியோகத்தரிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளன. |

## 5. செயற்பாட்டு மீளாய்வு

### 5.1 செயலாற்றல்

#### 5.1.1 அரசாங்க மானியங்கள்

மாகாண சபை அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக கிடைத்திருந்த ஏற்பாடுகள் மற்றும்பயன்பாடுகள் தொடர்பாக விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | மூலவளங்கள் | மாகான சபைக்கு கிடைத்த தொகை | செலவிடப்பட்ட தொகை | குறை பயன்பாடு |
|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் |
| (அ) | மாகாண நிச்சயிக்கப்பட்ட அபிவிருத்தி மானியம் (PSDG) | 1,293 | 1,404 | |
| (ஆ) | மாகாண அபிவிருத்தி மானியம் (PDG) | 276 | * | 11 |
| (இ) | நெறிமுறை அடிப்படை மானியம் (CBG) | 240 | 394 | |
| (ஈ) | விஷேட துறைசார் அபிவிருத்தி செயற்திட்ட மானியம் (சுகாதாரம்) | 185 | 169 | 16 |
| | | 1,994 | 1,967 | 27 |

* மாகாண அபிவிருத்தி மானியங்களிற்கான (PDG) செலவுகள் (PSDG) மற்றும் (CBG)செலவுகளில் அடங்கியுள்ளன.

### 5.1.2 மாகான அபிவிருத்தி திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஆயர்வேத திணைக்கள மீளாய்வாண்டு அபிவிருத்தி திட்டத்தில் உள்ளடங்கிய 08 வேலைத் திட்டங்களிற்காக கூட்டுத்தொகை ரூபா 6,255,510 அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும், 2019 திசெம்பர் 31 திகதியின்று முன்னேற்ற அறிக்கையின் படி அவற்றில் ரூபா 3,040,889 தொகை எஞ்சியிருந்ததுடன், அது அவ் வேலைத்திட்டங்களிற்கு ஒதுக்கிய பணத்தின் 19 முதல் 100 சதவீதம் வரையான வீச்சலவை கொண்டிருந்தது. மேலும், ஆண்டு முடிவடைய மிகக் கிட்டிய காலப்பகுதியிற்குள் வேலைத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தமைஇந் நிலைக்கு காரணமாக அமைந்திருந்தது. | திட்டமிடப்பட்ட வேலைத் திட்டங்களை உச்ச அளவில் நடைமுறைப்படுத்த முயற்சி எடுக்க வேண்டும். | மீளாய்வாண்டு அபிவிருத்தி திட்டம் 2019 ஜுன் மாதம் அங்கீகாரமாகியுள்ளதால் இந் நிலைமை ஏற்பட்டுள்ளது. |

### 5.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | றமுக்கன நிறைவேற்று பொறியல் அலுவலகம் அமைந்துள்ள 1.9263 ஹெக்டயார் அளவான காணியிலிருந்து 0.6867 ஹெக்டயார் அளவான 11 காணித்துண்டுகள் அனுமதியற்ற குடியிறுப்பாளர்களால் கைப்பற்றப்பட்டிருந்தன. அரச வேலை திணைக்களத்திற்கு சொந்தமாக இருந்த இக்காணியை 1987 ஆண்டில் வீதி அபிவிருத்தி அதிகார சபையிற்கும் அதன் பின்னர் பிரதி பிரதான செயலாளர் (பொறியில் சேவை) அலுவலகத்திற்கும் முறையற்ற விதத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் சுவீகரித்தல் நடவடிக்கைகள் இது வரை மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | பிரதி பிரதான செயலாளர் (பொறியில் சேவை) அலுவலகத்தின் கீழ் காணப்படும் நிறுவனங்கள் நடாத்தும் காணிகளை, மாகாண சபையிற்கு சுவீகரிக்க தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | இக் காணி தொடர்பாக எடுக்க முடியுமான உச்ச நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மாகாணத்தினுள் புதிய வருமான வழிகளை இனங்காண மற்றும் வருமான வழிகளை மேம்படுத்திக் கொள்ளும் நோக்கில் மாகாணத்தில் வியாபார பெயர் பதிவுக் கட்டணத்தை திருத்த 2015 ஆண்டில் தீர்மானித்திருந்த போதும் 30 ஆண்டுகளிற்கு கிட்டிய காலம் பழமையான கட்டண முறைநடைமுறையாகி இருந்தது. | அரசிற்கு உச்ச நலன் பயக்கும் வகையில் காலத்திற்கு ஏற்றவாறு கட்டணம் திருத்தப்பட வேண்டும். | சபரகமுவ மாகாண சபையின் உத்தியோகபூர்வ காலம் முடிவடைந்துள்ளதால் புதிய மாகாண சபை ஒன்று தெரிவு செய்யப்படும் வரையில் கொள்கை ரீதியான திருத்தமொன்றை மேற்கொள்ள முடியாததுடன் அது வரை கட்டண திருத்தத்திற்கான சந்தர்ப்பமொன்று கிடைப்பதில்லை. |
| (இ) | எம்பிலிபிட்டிய பிரதேச செயலக பிரிவில் 1995 முதல் அனுமதியின்றி பயன்படுத்தும் ஹெக்டயார் 9.9123 ஆன அரச காணியை நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்க காணி ஆணையாளர் நாயகம் மற்றும் அமைச்சர் முறையே 2011 மற்றும் 2016 ஆண்டுகளில் அங்கரித்திருந்தனர். 2020 ஜனவரி 13 திகதி வரையும் குறித்த காணியை பயன்படுத்தும் 04 நபர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 10,451,432 நிலுவை குத்தகை பணத்தை அறவிட்டு நீண்ட கால குத்தகை உருதிப்பத்திரம் ஒன்றை வழங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விரைவில் குத்தகை உருதிப்பத்திரம் ஒன்றை வழங்கி குத்தகை பணம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | குத்தகை பணம் தொடர்பாக குத்தகைகாரரகளின் கோரிக்கைகளிற்கான அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன், அதன் பிரகாரம் முன் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | சபரகமுவ அபிவிருத்தி திணைக்கள அலுவலர்களினால் சங்கமொன்றின் அங்கத்தவர் தெரிவு நடவடிக்கைகளிற்கு சமுகமளித்ததாக குறிப்பிட்டு ரூபா 409,000 ஆன பெறுவனவொன்றை மோசடியாக அச் சங்கத்திடமிருந்து பெற்றிருந்ததாக மாகாண உள்ளக கணக்காய்வு திணைக்களகத்தினால் வெளிப்படுத்தியிருந்த போதும், கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் அது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மோசடியாக கொடுப்பனவை பெற்ற அனைத்து அலுவலர்களையும் இனங்கண்டு அறவீட்டை மேற்கொள்ள வேண்டும். | மோசடியான கொடுப்பனவு தொடர்பான அறிக்கையில் குறிப்பிடப்படும் அலுவலர்களிடமிருந்து அறவிடுமாறு உதவி ஆணையாளர் அறிவூட்டப்பட்டுள்ளார். |

## 5.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கடமைகளாக கூட்டுறவு சங்கங்களை அபிவித்தி செய்தல், கூட்டுறவு சங்கங்களை கட்டுப்படுத்தல் மற்றும் சங்கங்களிற்கு | சங்கங்களின் நிதி கட்டுப்பாடு தொடர்பாக மேற்பார்வை நடவடிக்கைகள் மிக | அவ்வப்போது சங்கங்களில் நிர்வாகம் மற்றும் நிதி நடவடிக்கைகள் தொடர்பாக சுற்றறிக்கை மூலம் ஆலோசனை |

| | | | |
|---|---|---|---|
| | மதியுரை சேவையை வழங்க இனங்கண்டிருந்த போதும் சபரகமுவ மாகாணத்தில் காணப்படும் 687 சங்கங்களினால் இறுதியாக சமர்ப்பித்துள்ள நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 156 சங்கங்களில் ரூபா 91,591,250 கூட்டுமொத்த இலாபமொன்று காணப்பட்டது. | முறைமையாக்க வேண்டும். | வழங்கியிருந்ததுடன், எதிர்காலத்தில் குறித்த ஆலோசனை வழங்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தினால் 1997 ஆண்டு முதல் 2009 ஆண்டு வரையான காலத்தினுள் 07 கூட்டுறவு சங்கங்களிற்கு வழங்கப்பட்டிருந்த கடன் தொகையிலிருந்து 2019திசெம்பர் 31 திகதிக்கு அறவிட வேண்டிய கடன் மீதி மற்றும் வட்டி முறையே ரூபா 4,456,444 மற்றும் ரூபா 6,536,961 ஆனதுடன், அக் கடனை அறவிட முறையான செயற்பாடொன்றை மேற்கொண்டிருக்கவில்லை. | நிலுவை கடன் மற்றும் வட்டியை அறவிட முறையான செயற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். | கூட்டுறவு சங்கத்தை முடிவுறுத்த நடவடிக்கை எடுத்தல், தவணை அறவிட ஒருமைப்பாட்டை பெற்றுக் கொள்ளல் போன்ற படிமுறைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன்,செயலற்ற சங்கங்கள் காணப்படுதல் மற்றும் தகவல்களை கண்டறிய முடியாமை இந் நிலைக்கு காரணமாகும். |

**5.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 நவம்பர் 28 ஆம் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் 03/2012(1) ஆம் இலக்க சுற்றறிகையினூடாக உள்ளூராட்சி நிறுவனங்களின் நகர முதல்வர்கள் மற்றும் தவிசாளர்களுக்கு ரூபா 5,000 தொகையான எல்லையினுள் மாதாந்த எரிபொருள் கொடுப்பனவொன்று வழங்குவதை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. உள்ளூராட்சி நிறுவனங்களின் பிரதானிகளுக்கு ஒவ்வொறு சபிகளினாலும் அங்கீகரிக்கப்பட்ட எரிபொருன் லீட்டர் அளவொன்று மாதாந்தம் கொடுக்கப்படுகையில் மாதாந்த எரிபொருள் கொடுப்பனவொன்றை அங்கீகரித்திருந்தமை சரச்சைக்குரிய விடயமொன்றாகியது. | உள்ளூராட்சி நிறுவனங்களின் நகர முதல்வர்கள் மற்றும் தவிசாளர்களுக்கு அங்கீகாரிக்கப்பட்ட எரிபொருள் அளவொன்றை மாதாந்தம் வழங்குவதனால் அதற்கு மேலதிகமாக எரிபொருள் கொடுப்பனவொன்று செலுத்துவது முறையற்றது. | 1987 இலக்கம் 15 கொண்ட பிரதேச சபை சட்டத்தின் 184(ஊ) கீழ் பிரதேச சபையொன்றின் தலைவருக்கு மற்றும் அங்கத்தவர்களுக்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவுகள் தொடர்பாகவிடய பொறுப்பு அமைச்சரிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், அவ் அதிகாரம் பிரகாரம் குறித்த எரிபொருள் கொடுப்பனவு செலுத்துதல் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | கல்வி அமைச்சின் ஒதுக்கீட்டின் மீது அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை கருதிட்டத்தை சபரகமுவ மாகாணத்தில் செயற்படுகத்துவதற்குஈடுபடுத்தப்பட்ட அலுவலர்களுக்கு கொடுப்பனவு செலுத்தும் போது மாகாண ஆளுனரின் | கொடுப்பனவு செலுத்துகையில் அடிப்படை சம்பளத்தை அடியாகக் கொண்டு கொடுப்பனவை செலுத்த வேண்டும். | ஆளுனரின் அங்கீகாரத்தின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. |

இலக்கம் 7/3/9/11 மற்றும் 2016 செப்டம்பர் 07 திகதிய கடிதம் பிரகாரம் நிறைவேற்று அலுவலர்களிற்காக அடிப்படை சம்பளத்திற்கு விஷேட கொடுப்பனவையும் சேர்த்து அதில் 1/3 பகுதியை கொடுப்பனவாக செலுத்தியிருந்ததால் மாகாண கல்வித் திணைக்களத்தின் மற்றும் மாகாண வலயக் கல்வி மணிமலைகளின் அலுவலர்களுக்கு 2016 – 2018 காலப்பகுதியினுள் ரூபா 336,666 மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.

## 5.5 பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பொது சுகாதார பரிசோதக அலுவலர்களிற்கான கைநூலின் மூன்றாம் அத்தியாயத்தின் 5.5 பிரிவு பிரகாரம் உணவுகளை கையாளும் C மற்றும் Dஎன வகைபடுத்தியுள்ள நிறுவனங்கள் மாதத்திற்கு ஒரு முறையும்,B என வகைபடுத்தியுள்ள நிறுவனங்கள் மாதத்திற்கு இரண்டு முறைகளும் A என வகைபடுத்தியுள்ள நிறுவனங்கள் மாதத்திற்கு மூன்று முறைகளும் பரிசோதிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ள போதும் பெல்மடுள்ள சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலக 03 பொது சுகாதார பிரிவுகளில் 374 உணவுகளை கையாளும் நிறுவனங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மாதிரி பரிசோதனையின் போது அவ் அனைத்து நிறுவனங்களும் 2017, 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் அதன் பிரகாரம் பரிசோதித்திருக்கவில்லை. | அனைத்து உணவுகளை கையாளும் நிறுவனங்களும் பரிசோதனைக்கு உட்படுத்தும் வகையில் வேலைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன், அது தெடர்பாக உரிய மெற்பார்வை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | அலுவலர்களின் இடமாற்றம், டெங்கு தொற்றிற்கு முன்னுரிமை வழங்கல், மூடப்பட்டுள்ள நிறுவனங்கள் தொடர்பாக தகவல்கள் நாளாதுவரையாக்கப் படாமை இந் நிலைமைக்கு காரணமாக அமைந்துள்ளதுடன், அப்பிரச்சினையான நிலைமையை தீர்த்து முன் பரிசோதனை நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 5.6 ஒப்பந்த நிர்வாக குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வேளைப் பெறுமதி ரூபா 120,710,188 ஆன புஸ்செல்ல பயிற்சி மத்திய நிலையத்தின் புதிய ஐந்து மாடி விடுதியை நிர்மாணிக்கும் வேளைகள் | அரச பெறுனர் வழிகாட்டிக் கோவை பிரகாரம் ஒப்பந்த நடவடிக்கைகளை | அதிகாரசபை சபரகமுவ மாகாண சபையிற்கு சொந்தமான நிறுவனம் ஒன்றாகையால் இந் நிறுவனத்திற்கு நிர்மாண வேலைகளிற்கான ஒப்பந்த |

| | | |
|---|---|---|
| தொடர்பாக அரச பெறுனர் வழிகாட்டிக் கோவை – 2006 இன் 5.4.8(அ) வழிகாட்டி பிரகாரம் ரூபா 6,035,509 இற்கான செயலாற்றுகை முறியொன்றைப் பெற்றிருக்காததுடன், 5.4.4(i) வழிகாட்டியிற்கு முரணாக ஒப்பந்தத் தொகையின் 35 சதவீதமான ரூபா 42,248,566 இனை முற்பணமாக செலுத்தியதில் ரூபா 18,106,528 மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. 2020 ஒக்டோபர் 19 திகதி வரை செலுத்தியிருந்த இடை பட்டியல்களிலிருந்து ரூபா 17,546,238 தொகை அறவிடப்பட்டு இருந்ததுடன், மேலும் ரூபா 24,702,328 தொகை அறவிட வேண்டியதாக காணப்பட்டது.<br>மேலும்,2020 ஜுன் 24 திகதி வரையிலும் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் ஒப்பந்தக்காரரினால் நிர்மாணப் பணிகள் இடைநடுவே நிருத்தப்பட்டிருந்தன. | மேற்கொள்ளப்பட வேண்டும். | ஒப்படைப்பின் போது செயலாற்றுகை பிணை முறிஆரபம்பத்தில் இருந்தே பெற்றுக் கொள்வதில்லை. அன்றிருந்து பிரதான செயலாளரின் அங்கீகாரத்தின் கீழ் ரூபா 42,248,566 முற்பணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அறவிட வேண்டிய முற்பணத்தை உடனடியாக மீள் செலுத்துமாறு அதிகார சபைக்கு பல சந்தர்ப்பங்களில்அறிவித்துள்ளதுடன் அந் நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு உள்ள ஏனைய வேளைகளின் பட்டியல்கள் மற்றும் தடுத்து வைத்தற் பணத்திலிருந்து இம் முற்பணத்தை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இக்கட்டிட எஞ்சிய வேளைக்கான மதிப்பீடொன்று பிரதி பிரதான செயலாளர் (பொறியியல் சேவை) இடமிருந்து கோரப்பட்டுள்ளது. தற்போது அபிவிருத்தி ஆக்கம் மற்றும் இயந்திர உபகரண அதிகாரசபையிற்கு நிர்மாண வேளைகள் தொடர்பான ஒப்பந்தங்களை வழங்குவது தடை செய்யப்பட்டுள்ளது. |

## 5.7 கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

### எதிர்பார்த்த விளைவுகளை அடைந்து கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபரகமுவ மாகாணத்தில் சுற்றுலாவை மேம்படுத்தும் நோக்கில் மாகாண வீதி இமைச்சினால் 2014 முதல் 2018 ஆண்டு வரையான காலப்பகுதியினுள் ரூபா 2,030,475 செலவில் சீலோகம சமுதாய சுற்றுலா கிராமத்தில் சுற்றுலா விடுதிக்காக உபகரணங்களை வழங்கல் மற்றும் கட்டிடம் நிர்மாணித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது போதும் குறித்த நோக்கத்திற்காக அவ் உபகரணங்கள்/கட்டிடம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை | எதிர்பார்த்த நோக்கம் செயற்படுத்தப்படுகின்றனவா என்பது தொடர்பாக முறையான மேற்பார்வை ஒன்று செய்யப்பட வேண்டும். | வழங்கப்பட்டிருந்த உபகரணங்களை எதிர்பார்த்த நோக்கத்திற்காக பயன்படுத்த குறித்த நிறுவனத்தினால் வருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளது. |

## 5.8 ஆளணி நிர்வாகம்

### 5.8.1 கல்வி மற்றும் சுகாதார துறை அல்லாத மாகாண சபையின் ஏனைய நிறுவனங்களின் ஆளணி பற்றாக்குறை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண அரச சேவை ஆணைக்குழு உதவி செயலாளர் (பரீட்சை) பதவி ஆணைக்குழு அமைக்கப்பட்ட திகதியிலிருந்து மற்றும் உதவி செயலாளர் (நிர்வாகம்) பதவி 2001 ஆண்டிலிருந்தும் வெற்றிடமாக காணப்பட்டதுடன், உயர் மட்ட அங்கீகரிக்கப்பட்ட 03 பதவிகளில் 02 பதவிகள் நீண்ட காலமாக வெற்றிடமாக காணப்படுகின்றன. | முக்கிய வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | உதவி செயலாளர் பதவிவெற்றிடம் இலங்கை நிர்வாக சேவையின் பதவியாகும். |
| (ஆ) | விளையாட்டு அபிலிருத்தி திணைக்கள மாகாண விளையாட்டு பணிப்பாளர் பதவி 2012 ஆண்டிலிருந்தும் உதவி பணிப்பாளர் (தொழிநுட்பம்) பதவி 2016 ஆண்டிலிருந்தும் வெற்றிடமாக காணப்படுகின்றன. | வெற்றிட பதவிகளிற்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். | கூடிய விரைவில் குறித்த வெற்றிடத்தை நிரப்ப நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | காணி அமைச்சின் உதவி செயலாளர் பதவிகள் 02 இல் ஒரு பதவி அமைச்சு அமைக்கப்பட்ட திகதியிலிருந்து வெற்றிடமாக காணப்பட்டதுடன்,மீளாய்வாண்டு இறுதியளவில் அப்பதவி உள்ளடங்களாக 07வெற்றிடங்கள் காணப்பட்டன. | முக்கிய வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆட்சேர்பிற்கான தேவை காணப்பட்ட போதும் அமைச்சில் இடவசதி இல்லாததால் வெற்றிடங்களை நிரப்ப முடியாதுள்ளது. |
| (ஈ) | பிரதி பிரதான செயலாளர் (பொறியியல் சேவை) அலுவலகத்தில் தொழிநுட்ப உத்தியோகத்தர் விஷேட தரத்தில் 12 பதவிகள், திட்டமிடல் உத்தியோகத்தர் விஷேட தர03 பதவிகளில் 15 உம், தொழிநுட்ப உத்தியோகத்தர் (i/ii/iii) 29 உம், அபிவிருத்தி உத்தியோகத்தர் 16 உம், முகாமை உதவியாளர் பதவி 02 உம், தொழிநுட்ப உதவியாளர் பதவி 09 மற்றும்படவரைஞர் (i/ii/iii) ஒன்றும் உள்ளடங்களாக 57 இரண்டாம் | முக்கிய வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. |

| | | | |
|---|---|---|---|
| | நிலை பதவிகள் மற்றும் ஆரம்ப நிலையில் 12 வெற்றிடங்களும் மீளாய்வாண்டில் இறுதி வரையும் காணப்பட்டன. | | |
| (உ) | உள்ளூராட்சி நிறுவனங்கள் 13 இன் செயலாளர் பதவிகள் 2002 முதல் 2016 வரையான காலப்பகுதியிலிருந்து வெற்றிடமாக காணப்படுவதுடன், பிரதேச சபைகள் 02 இன் செயலாளர் பதவிகள் 2018 முதல்வெற்றிடமாக காணப்பட்டன. குறித்த பதவிகளிற்காக பதில் கடமை அடிப்படையில் அலுவலர்கள் இணைக்கப்பட்டிருந்த போதும் அதற்காக நிரந்தர அலுவலர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முக்கிய பதவி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெற்றிடங்களை நிரப்ப மாகாண அரச சேவை ஆணைக்குழு அறிவூட்டப்பட்டுள்ளது. |

### 5.8.2 கல்வித் துறையில் ஆளணி மிகை மற்றும் வெற்றிடங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கேகாலை, கலிகமுவ,தெதிகம மற்றும் வரகாபொல ஆகிய கல்வி வலயங்களின் 11 பாடசாலைகளில் 40 ஆசிரிய வெற்றிடங்கள் காணப்பட்டன. மேலும் 44 பாடசாலைகளில் ஆசிரியர் மிகை முறையே 167, 62, 08 மற்றும் 28 ஆனது. கல்வி அமைச்சின் செயலாளரின் 2016 ஜனவரி 07 திகதிய இலக்கம் ED/03/38/03/13 கொண்ட சுற்றறிக்கையின் 8.2 பந்தி பிரகாரம் ஆசிரியர் வெற்றிடங்கள் மற்றும் மிகையினை கணக்கிட்டு ஆசிரிய இடமாற்ற கொள்கையை கவனத்தில் கொண்டு வலயத்தினுள் ஆசிரியர் சமநிலையினை ஏற்படுத்தி இருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் ஆசிரிய இடமாற்ற கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும். | நடைமுறையில் ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படாததுடன் வருடாந்த இடமாற்றத்தினால் மிகையான ஆசிரியர்களை வெற்றிடமான பாடசாலைகளிற்கு இடமாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கணக்காய்வு ஐயவினாவினால் சுட்டிக்காட்டப்பட்டதன் பின்னர் மிகை ஆசிரயர்கள் பற்றிய தகவல்களை பெற கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |

### 5.8.3 சுகாதாரத் துறையில் ஆளணி மிகை மற்றும் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியளவில் 230 வைத்தி உத்தியோகத்தர்கள், 334 தாதிமார்கள், 29 தாதி சகோதரிகள், 251 குடும்ப சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் 165 பராமரிப்பாளர்கள் என்றவாறு பதவி வெற்றிடங்கள் காணப்படதுடன், அது மாகாண சுகாதார சேவையின் செயலாற்றலிற்கு | முக்கிய பதவி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுகாதார திணைக்கள பதவிகளிற்கான ஆட்சேர்ப்பு வரிசை அமைச்சினால் மேற்கொள்ளப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகவுள்ளது. | | |
| (ஆ) | மாகாண ஆயுர்வேத திணைக்கள உத்தியோகத்தர்களில் 190 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், பிரதி ஆயுர்வேத ஆணையாளரொருவர், 11 நிபுணத்துவ ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தர்கள், ஆயுர்வேத வைத்திய அதிகாரி ஒருவர், கடமை பொறுப்பு ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தர்ஒருவர், மேற்பார்வை சமூக ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தர் ஒருவர், 07 தாதிமார்கள்,இரு விஞ்ஞான ஆய்வுகூட களைஞர்கள், 34 தேக பிடிப்பாளர்கள், 10ஆயுர்வேத மருந்தகர்கள், 14 மருந்து கலவையாளர்கள் மற்றும் 41 பராமரிப்பாளர்களும் அவ் வெற்றிட பதவிகளிற்குள் உள்ளடங்கியிருந்தனர். மேலும், 12 ஆயர்வேத வைத்திய உத்தியோகத்தர்கள் மற்றும் 85 சாதாரண மற்றும் சுகாதார தொழிலாளர்களின் மிகையொன்று காணப்பட்டது. | முக்கிய பதவி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெற்றிட பதவிகளிற்கு ஆட்சேர்க்குமாறு உரிய பிரிவுகளிற்கு அறிவித்துள்ளதுடன்,அங்கீகரிக்கப்பட்ட ஆளணியை திருத்திக் கொள்ள முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |